

# வேலைவாய்ப்பு செய்திகள்



# பெல் நிறுவனத்தில் 125 பேருக்கு வேலை: சம்பளம் ரூ.28 ஆயிரம் முதல் 50 ஆயிரம்

பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனத்தில் பயிற்சி பொறியாளர், திட்ட பொறியாளர் போன்ற பணியிடங்களுக்கான 125 காலியிடங்கள் அறிவிப்பு வெளியிடப் பட்டிருக்கிறது.

பொறியியல் துறையில் சம்பந்தப்பட்ட பிரிவில் பட்டம் பெற்றவர்களும், எம்.பி.ஏ. முடித்தவர்களும் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம்.

Traine engineer(எலெக்ட்ரானிக்ஸ்) துறைக்கு 15 பேரும், trainen engineer( மெகானிக்கல்)துறைக்கு 18 பேரும் trainee officer(finance) 2பேரும், trainee engineer2 :60 ஆகிய பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. மாத சம்பளம் 28 ஆயிரம் ரூபாய் முதல்34 ஆயிரம் வரையில் கிடைக்கும் என்றும், 1.11.2020 தேதிக்குள் 25 வயதிற்குள் உள்ளவர்கள் இந்த வேலைக்கு விண்ணபிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மேலும், project engineer (electronics)துறையில் 25 காலி பணிடங்களும், project engineer( civil) துறையில் 2 இடங்களும், peroject engineer(electrical)துறையில் 2 பணியிடங்களும் project officer( human resourse) துறையில் ஒரு பணியிடமும் காலியாக இருக்கின்றன. ரூ.35 ஆயிரம் முதல் ரூ.50 ஆயிரம் வரையிலான வேலைகளுக்கு பொறியியல் துறையில் பி.எஸ்.சி., பி.டெக், எம்.சி.ஏ., எம்.பி.ஏ., எம்.எஸ். டபில்யூ முடித்தவர்களில் 1.11.2020 தேதியின்படி 28 வயதிற்குள் இருப்பவர்கள் விண்ணப்பிக்கலாம் என்றும் பெல் நிறூவனம் அறிவித்திருக்கிறது.

ஒவ்வொரு பாடப்பிரிகளிலும் பெற்ற மதிப்பெண்கள், பணி, அனுபவம் மற்றும் நேர் முகத்தேர்வு அடிப்படையில் தகுதியானவர்கள் தேர்வுசெய்யப்பட இருக்கிறார்கள்.

பொது மற்றும் ஒபிசி பிரிவினருக்கு விண்ணபக்கட்டணம் 500 என்றும், அனைத்து பிரிவை சேர்ந்த விண்ணப்ப தாரர்களுக்கு 200 கட்டணம் என்று விண்ணபக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது.

www.apply-exam.co.in http://www. appleyexam.co.in இணையத்தில் மூலமாக 25.11.2020க்குள் விண்ணப்பங்களை விண்ணப்பிக்கலாம்.

# பெண் குழந்தைகளுக்கு உதவித்தொகை

## சிபிஎஸ்இ அறிவிப்பு

**சென்னை, நவ.12:** பத்தாம் வகுப்பை முடித்த ஒற்றைப் பெண் குழந்தைகளுக்கு உதவித் தொகை (Merit Scholarships For Single Girl Child) வழங்கப்படும் என சிபிஎஸ்இ அறிவித்துள்ளது.

இதுகுறித்து சிபிஎஸ்இ வெளியிட்டுள்ள அறிவிப்பு: மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் சார்பில் ஒற்றைப் பெண் குழந்தைகளுக்கு உதவித் தொகை வழங்க விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பத்தாம் வகுப்பை முடித்த மாணவிகள் இதற்குத் தகுதியானவர்கள் ஆவர். சிபிஎஸ்இ மற்றும் அதன் கட்டுப்பாட்டில் இயங்கும் பள்ளிகள் இந்த உதவித்தொகைத் திட்டத்துக்கு விணப்பிக்கலாம்.

இதற்கு விண்ணப்பிக்கக் கடைசித் தேதி டிச. 10 ஆகும். விண்ணப்பப் படிவத்தைப் புதுப்பிக்கச் சமர்ப்பிக்க வேண்டிய தேதி டிச. 28 ஆகும். பத்தாம் வகுப்பில் 60 சதவீதம் அல்லது அதற்கு மேல் மதிப்பெண் பெற்றுள்ள மாணவிகள், பிளஸ் 1 மற்றும் பிளஸ் 2 வகுப்பை சிபிஎஸ்இ மற்றும் அதன் கட்டுப்பாட்டில் இயங்கும் பள்ளிகளில் படிக்கும் மாணவிகள் இதற்குத் தகுதியானவர்கள். எனினும் கல்வியாண்டில் மாதந்தோறும் கல்விக் கட்டணம் ரூ.1,500-க்கு மிகாமல் இருக்க வேண்டும். இந்தியக் குடிமகன்கள் மட்டுமே இந்த உதவித் தொகைக்குத் தகுதியானவர்கள்.

பெண் குழந்தைகளிடையே கல்வியை ஊக்குவிக்கும் பெற்றோரின் முயற்சிகளை அங்கீகரிக்கும் விதமாகவும் திறமையான மாணவர்களுக்கு ஊக்கமளிக்கும் விதமாகவும் உதவித்தொகை வழங்கப்படுகிறது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தகவல் பெற cbse.nic.in. என்ற இணைய தளத்தை தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அடுத்த வாரத்தில் மருத்துவக் கலந்தாய்வு



சென்னை, நவ. 12: மருத்துவப் படிப்புகளுக்கான தரவரிசைப் பட்டியல் வரும் திங்கள்கிழமை (நவ.16) வெளியாகவுள்ள நிலையில், அதற்கு அடுத்த ஓரிரு நாள்களில் மாணவர் சேர்க்கை கலந்தாய்வு தொடங்கும் என சுகாதாரத் துறை அமைச்சர் விஜயபாஸ்கர் தெரிவித்தார்.

இதுகுறித்து சென்னையில் செய்தியாளர்களிடம் அவர் வியாழக்கிழமை கூறியதாவது:

கரோனா காலத்தில் 108 ஆம்புலன்ஸ் பணி சிறப்பாக பணியாற்றி வருகிறது. இதுவரை 2.92 லட்சம் கரோனா நோயாளிகள் 108 சேவை மூலம் பயனடைந்துள்ளனர்.

மருத்துவப் படிப்புகளுக்கு விண்ணப்பிப்பதற்கான அவகாசம் நிறைவடைந்துள்ளது. ஏற்கெனவே அனுப்பப்பட்ட விண்ணப்பங்களில் ஏதேனும் திருத்தம் இருந்தால் மருத்துவக் கல்வி இயக்ககத்துக்கு மின்னஞ்சல் அனுப்பினால் போதுமானது. சிறிய தவறுகளுக்காக விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட மாட்டாது. இதுவரை 34,424 பேர் மருத்துவப் படிப்புகளுக்கு விண்ணப்பித்துள்ளனர். நிகழாண்டில் தமிழகத்தில் 4,061 மருத்துவ இடங்கள் உள்ளன. தேசிய மருத்துவ ஆணையம் அனுமதிக்கும் பட்சத்தில் அந்த எண்ணிக்கை அதிகரிக்கவும் வாய்ப்பிருக்கிறது.

திட்டமிட்டபடி தரவரிசைப் பட்டியல் வரும் 16-ஆம் தேதி வெளியிடப்படும். அதற்கு அடுத்த ஓரிரு நாள்களில் கலந்தாய்வு தொடங்கும். முதலில் சிறப்புப் பிரிவினருக்கும், அதைத் தொடர்ந்து அரசுப் பள்ளி மாணவர்களுக்கும் கலந்தாய்வு நடைபெறும்.

ஆண்டுதோறும் மருத்துவக் கலந்தாய்வு நேரடியாகத்தான் நடைபெற்று வருகிறது. அந்த வகையில், நிகழாண்டும் உரிய பாதுகாப்பு வழிமுறைகளுடன் நேரு உள்விளையாட்டு அரங்கம் போன்ற பெரிய இடங்களில் அதனை நடத்தத் திட்டமிட்டுள்ளோம்.

கடந்த முறை ஆள் மாறாட்டம் போன்ற விமர்சனங்கள் எழுந்தன. அப்படியான எந்த விஷயங்களும் இனி நடக்காது. இம்முறை அனைத்துச் சான்றிதழ்களையும் நேரடியாக ஆய்வு செய்ய கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. நாளொன்று 500 பேர் வரை மட்டுமே கலந்தாய்வில் கலந்துகொள்ள வாய்ப்பிருக்கிறது என்றார்.

## படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள்

# அரசின் உதவித்தொகை பெற விண்ணப்பிக்க அழைப்பு

### டிசம்பர் 31ம் தேதி கடைசி

**திருவாரூர், நவ.13:** திருவாரூர் மாவட்டத்தில் படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் அரசின் உதவிதொகை பெற விண்ணப்பிக்கலாம்.

இதுகுறித்து கலெக்டர் சாந்தா வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது: படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம் தமிழக அரசால் 2006 -ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின் கீழ் பயன்பெற வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து முறையாக பதிவை புதுப்பித்திருக்க வேண்டும்.

அதன்படி கடந்த 2015ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30ந் தேதியன்றோ அல்லது அதற்கும் முன்பாக பதிவு செய்து 5 ஆண்டுகள் பூர்த்தியாகி இருக்கவேண்டும். 10ம் வகுப்புதேர்ச்சி பெறாதவர்களுக்கு மாதம் ரூ.200ம், தேர்ச்சிபெற்றவர்களுக்கு மாதம் ரூ.300-ம், மேல்நிலைக்கல்வி தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.400ம், பட்டப்படிப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.600ம் என இந்த உதவி தொகை தற்போது வழங்கப்பட்டு வருகிறது. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இனத்தை சேர்ந்தவராயின் 45 வயதிற்குள்ளும், இதர வகுப்பினர் 40 வயதிற்குள்ளும் இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரரின் குடும்ப வருமானம் ரூ.72 ஆயிரத்திற்கு - மிகாமல் இருக்க வேண்டும். மேலும் மாற்றுத்திறனாளிகளுக்கு பள்ளி இறுதிவகுப்புவரை படித்தவர்களுக்கு மாதம் ரூ.600ம், மேல்நிலைக்கல்வி தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.750ம், பட்டப்படிப்புதேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ ஆயிரமும் உதவித்தொகையாக வழங்கப்படுகிறது.

இவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து கடந்த மாதம் 30ம் தேதியுடன் ஓராண்டு பூர்த்தியாகி இருக்க வேண்டும். இவர்களுக்கு வருமான உச்ச வரம்பு ஏதுமில்லை. உதவித்தொகைகோரும் விண்ணப்பதாரர்கள் உதவிதொகை பெறும் காலத்தில் எந்த ஒரு கல்வி நிறுவனத்திலும் முழு நேர மாணவராக இருத்தல் கூடாது. ஆயினும் தொலைதூரக்கல்வி பயில்பவராக இருக்கலாம். அரசுத்துறை அல்லது தனியார் துறையில் ஊதியம் பெறும் எந்த பதவியிலோ அல்லது சுயவேலைவாய்ப்பிலோ ஈடுபடுபவராக இருக்கக்கூடாது. முற்றிலும் வேலையில்லாதவராக இருக்க வேண்டும்.

எனவே திருவாரூர் மாவட்டத்தில் தகுதியுடை விண்ணப்பதாரர்கள் இதற்கான விண்ணப்ப படிவத்தை *https://tnvelaivaaippu.gov.in* அல்லது *www.tnvelaivaaippu.gov.in* என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்த விண்ணப்ப படிவங்கள் அனைத்து கல்வி சான்றிதழ்களுடன் அடுத்த மாதம் (டிசம்பர்) 31ம் தேதிக்குள் திருவாரூர் மன்னார்குடி சாலையில் இயங்கிவரும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் நேரில் அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் இந்த உதவிதொகையானது மாற்றுத்திறனாளிகளுக்கு 10 வருடங்களுக்கும், மற்றவர்களுக்கு 3 வருடங்களுக்கும் வழங்கப்படும். பயனாளிகள் ஒவ்வொரு ஆண்டிலும் ஏப்ரல் அல்லது மே மாதங்களில் சுய உறுதிமொழி ஆவணம் பூர்த்தி செய்து அளிக்க வேண்டும் என்று கலெக்டர் சாந்தா தெரிவித்துள்ளார்.

# சிஏ தேர்வு திட்டமிட்ட தேதியில் நடைபெறும்

**சென்னை, நவ. 12:** சிஏ தேர்வுக்கான தேர்வுக்கூட அனுமதிச் சீட்டு வெளியிடப்பட்டுள்ள நிலையில், திட்டமிட்ட தேதியில் தேர்வு தொடங்கும் என்று ஐசிஏஐ உறுதிபடத் தெரிவித்துள்ளது.

இந்தியக் கணக்குத் தணிக்கையாளர் அமைப்பின் (ஐசிஏஐ) சார்பில் சிஏ எனப்படும் கணக்குத் தணிக்கையாளர் தேர்வு ஆண்டுக்கு 2 முறை நடத்தப்படுகிறது. இந்த ஆண்டுக்கான தேர்வு, கரோனா பரவல் காரணமாகத் தள்ளி வைக்கப்பட்டது. இதையடுத்து பிகார் தேர்தல் காரணமாக மீண்டும் தேர்வு தள்ளி வைக்கப்பட்டது.

## ஐசிஏஐ தகவல்

இந்தநிலையில், சிஏ படிப்புகளுக்கான தேர்வுகள் நவம்பர் 21 முதல் டிசம்பர் 14-ஆம் தேதி வரை நடைபெற உள்ளன. சிஏ அடிப்படை, இடைநிலை மற்றும் இறுதித் தேர்வுகள் அனைத்தும் இந்தத் தேதிகளிலேயே நடைபெறும் என இந்தியக் கணக்குத் தணிக்கையாளர் அமைப்பு அறிவித்துள்ளது.

தேர்வுக்கான அனுமதிச் சீட்டு வெளியிடப்பட்டுள்ள நிலையில், திட்டமிட்ட தேதியில் தேர்வு தொடங்கும் என ஐசிஏஐ தெரிவித்துள்ளது. இது தொடர்பாக ஐசிஏஐ வியாழக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கை: மாணவர்கள் தேர்வுகளில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும். தவறான பிரசாரம், போலித் தகவல்கள் குறித்து கவலைப்பட வேண்டாம்.

கூடுதல் விவரங்களுக்கு icai.org என்ற இணையதளத்தைப் பார்க்கலாம் என தெரிவித்துள்ளது. ஏற்கெனவே சிஏ தேர்வுகள் அடுத்த ஆண்டு ஜனவரி வரை தள்ளி வைக்கப்பட்டதாக சமூக ஊடகங்களில் தகவல் வெளியான நிலையில், அதற்கு இந்தியக் கணக்குத் தணிக்கையாளர் அமைப்பு மறுப்புத் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

இந்திய அரசு

# மேம்பாட்டு ஆணையர் அலுவலகம் (MSME)

# MSME மேம்பாட்டு நிறுவனம், சென்னை

# (MSME அமைச்சகம், இந்திய அரசு)

கண்டறியப்பட்ட கீழ்கண்ட தொகுப்பிற்கு பொதுமக்கள் வசதி மையத்தை (CFC) ஏற்படுத்துவதற்காக **MSME அமைச்சகம்,** இந்திய அரசின் **MSE-CDP** திட்டத்தின் கீழ் சாத்தியமான தொகுப்பு **SPV**-களிடமிருந்து ஆன்லைன் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

1. **தோல் தொகுப்புகள்,** பல்லாவரம், செங்கல்பட்டு மாவட்டம்.
2. **அச்சு தொகுப்பு,** ஆற்காடு, ராணிப்பேட்டை மாவட்டம்.

SPV ஆனவர், கம்பெனி சட்டம் 2013-ன் பிரிவு 8-ன் கீழ் பதிவு செய்யப்பட்ட கம்பெனியாக இருக்க வேண்டும். ஆர்வமுள்ள SPV-க்கள் தங்களது விண்ணப்பத்தை ஆன்லைனில் **(https://cluster.dcmsme.gov.in/)** 18-11-2020 அன்று அல்லது அதற்கு முன்பாக சமர்பிக்க வேண்டும். விண்ணப்பத்தை நேரில் சமர்பித்தல் ஏற்றுக் கொள்ளபடமாட்டாது. MSE-CDP திட்டத்தின் மாற்றியமைக்கப்பட்ட செயல்பாட்டு வழிகாட்டல் நெறிமுறைகள் அமைச்சகத்தின் www.dcmsme.gov.in இணையதளத்தில் கிடைக்கும்.

ஏதேனும் விளக்கத்திற்கு அணுகவும்: திரு. C.P. ரெட்டி, உதவி இயக்குனர்/ கிளஸ்டர் டெவலப்மெண்ட் ஆபீசர், மொபைல் எண் 94381 75051.

**MSME மேம்பாட்டு நிறுவனம், சென்னை**

65/1, GST ரோடு, கிண்டி, சென்னை-32,

போன்: 22501011-13, 22501785 (DIR)

ஃபேக்ஸ்: 22501014, மின்னஞ்சல்: dcdi-chennai@dcmsme.gov.in

davp 25113/11/0026/2021

# GOVERNMENT OF INDIA

# OFFICE OF THE DEVELOPMENT COMMISSIONER (MSME)

## MSME DEVELOPMENT INSTITUTE, CHENNAI

(Ministry of MSME, Govt. of India)

Online proposals are invited from potential Cluster SPV under the scheme of MSE-CDP of Ministry of MSME, Govt. of India for establishment of Common Facility Centre (CFC) for the following identified cluster:

1. **Leather Clusters,** Pallavaram, Chengalpet District
2. **Printing Cluster,** Arcot, Ranipet District

The SPV should be registered company under section 8 of Company Act 2013. The willing SPV may submit proposals online on or before 18.11.2020 (**https://cluster.dcmsme.gov.in/**).

No physical mode of submission of proposal shall be accepted.

Operational Revised Guidelines of the MSE-CDP scheme is available on Ministry's Website: **www.dcmsme.gov.in**

For clarification, if any, please contact Shri. C.P Reddy, Asst. Director / Cluster Development Officer, Mobile No. 94381 75051.

**MSME DEVELOPMENT INSTITUTE, CHENNAI**
65/1, GST Road, Guindy, Chennai-32
Phone: 22501011-13, 22501785 (DIR)
Fax: 22501014, Email: dcdi-chennai@dcmsme.gov.in

davp 25113/11/0026/2021

# Bengaluru Dr. B.R. Ambedkar School of Economics (BASE)

(A Unitary University, Government of Karnataka)
BASE, Opposite to NLSIU, Jnanabharati campus, Nagarbhavi, Bengaluru, Karnataka - 560072

## PhD ADMISSIONS : 2020-21

Bengaluru Dr. B. R. Ambedkar School of Economics (BASE) University aims to become a globally recognized institution of excellence in the field of Economics and allied academic disciplines.

Online application is invited for full time Doctoral program in Economics.

Minimum eligibility requirement:

- **M.A./M.Sc. in Economics or related disciplines/Developmental Studies**
- **Qualified for UGC NET JRF/Lectureship**

The detailed requirement and application form is available in the University website. **Online application and payment of fee**: Candidates can fill the application form online available at **https://www.base.ac.in** General Category: Application fee is **Rs.500/-**, SC/ST/PWD: Application fee is **Rs.100/-**. Last Date for submitting the application: **15.12.2020.**

Sd/- Registrar, BASE

Contact : Opposite to NLSIU, Jnanabharati campus, Nagarbhavi, Bengaluru, Karnataka
E-mail: phd@base.ac.in

DIPR/DDU/YC/1655/2020-21

**COVID-19 - DON'T SPREAD RUMOURS. ACT RESPONSIBLY, AVOID INFECTION-NOT THE INFECTED.**

Wear Mask | 6 Feet Follow Physical Distancing | Maintain Hand Hygiene

# ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம்

B-14/A, சத்ரபதி சிவாஜி பவன், குதிப் இன்ஸ்டிடியூசனல் ஏரியா,
கத்வாரியா சாரை, புதுடெல்லி–110016

## ஒப்பந்த அடிப்படையில் PFRDA-ல் ஜூனியர் பொருளாதார நிபுணரை நியமனம் செய்தல்

மூன்று (03) ஆண்டு காலத்திற்கு முற்றிலும் **ஒப்பந்த அடிப்படையில்** PERDA-ல் **ஜூனியர் பொருளாதார நிபுணர்** ஒரு (1) பதவியை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. தகுதி கூறு, தேர்ந்தெடுத்தல் முறை, ஊதியம் மற்றும் விண்ணப்ப படிவம் முதலியவற்றின் முழுமையான விபரங்கள் PFRDA இணையதளம்: www.pfrda.org.in-ல் கிடைக்கும் மற்றும் நேசனல் கேரியர் சர்வீஸ் இணையதளம் www.ncs.gov.in-லும் கிடைக்கும்.

2. இந்த காலியிட அறிவிக்கை சம்பந்தமான ஏதேனும் திருத்தம் / பிற்சேர்க்கை / அறிவிப்புகள் (ஏதேனும் இருப்பின்) PFRDA இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும்.

3. விண்ணப்பங்கள் பெறப்படுவதற்கான கடைசி தேதி **11 டிசம்பர் 2020 (வெள்ளிக்கிழமை)**

ஒம்/-
பொது மேலாளர்
(நிர்வாகம் & HR)

davp 15102/11/0012/2021

# aavin THE TAMILNADU COOPERATIVE MILK PRODUCERS' FEDERATION LIMITED

ADVERTISEMENT NO: 732/PE8/2020 **EMPLOYMENT NOTIFICATION** DATED: 12.11.2020

The Tamil Nadu Cooperative Milk Producers' Federation Limited invites online applications from the qualified and eligible persons for appointment to the post of **Senior Factory Assistant** on regular basis.

| Name of the post | No. of vacancies | Place of work | Revised Level of pay |
|---|---|---|---|
| Senior Factory Assistant (Dairying) | 170 | Federation jurisdictions i.e. Chennai, Erode, Nilgiris, Tiruvannamalai, Salem & Thanjavur | Rs.15700-50000 [Pay Matrix Level (1)] |
| Senior Factory Assistant (Lab) | 20 | | |
| Senior Factory Assistant (Animal Husbandry) | 70 | | |
| Senior Factory Assistant (Admn.) | 70 | | |
| Senior Factory Assistant (Marketing) | 60 | | |
| Senior Factory Assistant (Engg.) | 70 | | |
| TOTAL | 460 | | |

**1.**Age as on **01.07.2020**

Minimum Age Limit : 18 Years Completed

Maximum Age Limit : 30 Years for OC

32 Years for BC, BC(Muslim), MBC&DNC

35 Years for SC(Arunthathiar), SC&ST

} Relaxation upto 10 years in each category for Differently Abled Candidates

**2.Application Fees and Mode of Payment :**

Application fee of Rs.250/- (Non-refundable) [Rs.212+Rs.38 GST (18%)] shall be paid through Debit Card/Credit Card/Net Banking/UPI by the candidates belonging to OC/BC/BC(Muslim)/MBC & DNC Communities, and Rs.100/- (Non-refundable) [Rs.85+Rs.15 GST (18%)] shall be paid through Debit Card/Credit Card/Net Banking/UPI by the candidates belonging to SC/ST/SC(A) Communities.

**3.Duration for applying online : 16.11.2020 to 05.12.2020**

**4.Website for applying online : www.aavinfedrecruitment.com**

**5.Last date & time for applying online : 05.12.2020 up to 5.30 P.M.**

The details of Educational qualification, Community wise breakup for the posts and guidelines to fill up the application online can be obtained from our **website: www.aavinfedrecruitment.com / www.aavinmilk.com**

DIPR/1102/DISPLAY/2020

**MANAGING DIRECTOR, TCMPF Limited.**

# ஓட்டுநர் (Driver) தேவை

முரசொலி அலுவலகத்தில் (JEEP) ஓட்டுநராகப் பணியாற்ற சிறந்த முன்னனுபவம் மிக்க ஓட்டுநர் தேவை. உரிய கல்விச் சான்று, ஓட்டுநர் உரிமம் மற்றும் பணியின் அனுபவச் சான்று இவைகளுடன் கீழ்க்கண்ட முகவரியில் நேரில் அணுகவும்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**பொது மேலாளர்**

**முரசொலி**

180, கோடம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை–600 034.

**பேரூராட்சிகள் துறை**

**கடலூர் மண்டலம், கடலூர் மாவட்டம்**

# ஸ்ரீமுஷ்ணம் தேர்வுநிலை பேரூராட்சி

## அறிவிப்பு

ந.க.எண்.176/2020 நாள்: 12.11.2020

கடலூர் மாவட்டம், ஸ்ரீமுஷ்ணம் பேரூராட்சியில் கீழ்கண்ட விபரபடி காலியாக உள்ள தூய்மை பணியாளர் பணியிடம் பூர்த்தி செய்திட ஸ்ரீமுஷ்ணம் பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் (Town Panchayat Limit) வசிக்கும் தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மேற்படி விண்ணப்பங்கள் மற்றும் இதர விபரங்கள் பேரூராட்சி அலுவலகத்தில் அலுவலக வேலை நாட்களில் தெரிந்துகொள்ளலாம்.

விண்ணப்பிக்க விரும்புவோர் 25.11.2020ம் தேதி பிற்பகல் 3.00 மணிக்குள் ஸ்ரீமுஷ்ணம் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களுக்கு கிடைக்கும் வகையில் பதிவஞ்சல் மூலம் விண்ணப்பித்துக்கொள்ள வேண்டும்.

**அட்டவணை**

| வ.எண் | பணியிடம் விவரம் | எண்ணிக்கை | இனசுழற்சி முறை ஒதுக்கீடு | வயது வரம்பு (01.10.2020) ம் தேதியில் | கல்வி தகுதி |
|---|---|---|---|---|---|
| 1 | தூய்மை பணியாளர் | 1 | SC-Arunthathiyar - Woman Destitute Widow (Priority) | 21 - 35 | எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும் |
| 2 | | 1 | MBC - General (Piority), | 21 - 32 | |
| 3 | | 1 | BC - General (Priority) | 21 - 32 | |
| | மொத்தம் | 3 | | | |

**நிபந்தனைகள்**

1) விண்ணப்பங்கள் பதிவஞ்சலில் மட்டுமே அனுப்பி வைக்கப்பட வேண்டும். நேரில் அளிக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுகொள்ளப்படமாட்டாது.
2) நிர்ணயிக்கப்பட்ட நாள் நேரத்திற்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டது.
3) சாதி மற்றும் முன்னுரிமைக்கான சான்றுகளின் நகல்களில் சுய சான்றிட்டு விண்ணப்பத்துடன் இணைத்திட வேண்டும், நேர்காணல் விபரம் பதிவஞ்சல் மூலம் விண்ணப்பதாரருக்கு தெரிவிக்கப்படும்.

**தனி அலுவலர்**
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்
கடலூர் மண்டலம், கடலூர்.

**செயல் அலுவலர்**
பேரூராட்சி அலுவலகம்
ஸ்ரீமுஷ்ணம்.

வெ.ஆணை எண்: 86/விளம்பரம்/செமதொ.அ/2020
நாள்: 12.11.2020

## திண்டுக்கல் மாவட்டத்தில்

# ஊர்க்காவல் படைக்கு நவ.19ல் தேர்வு

## ஆவணங்களுடன் ஆஜராக அறிவுறுத்தல்

**திண்டுக்கல், நவ. 13:** திண்டுக்கல் மாவட்டத்தில் ஊர்க்காவல் படைக்கு 54 பேர் தேர்வு செய்யப்படவுள்ளனர். ஆவணங்களுடன் நவ.19ல் சீலப்பாடி ஆயுதப்படை மைதானத்தில் ஆஜராக வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



திண்டுக்கல் மாவட்ட ஊர்காவல் படைக்கு 44 ஆண்கள், 10 பெண்கள் என 54 பேர் தேர்வு செய்யப்பட உள்ளனர். இத்தேர்வில் கலந்து கொள்வதற்கு 10ம் வகுப்பு தோல்வி அல்லது தேர்ச்சி பெற்றவர்களாகவும், 18 வயதுக்கு குறையாமலும், 45 வயதுக்கு மிகாமலும் இருப்பவர்களாகவும், திண்டுக்கல் மாவட்ட எல்லைக்குள் வசிப்பவர்களாகவும், எவ்வித குற்ற பின்னணி இல்லாதவராகவும் இருக்க வேண்டும்.

ஆர்வம் உள்ள பொது மக்கள், அரசு பணியாளர்கள், தனியார் நிறுவன ஊழியர்கள், சுய தொழில் புரிவோர் இத்தேர்வில் கலந்து கொள்ளலாம்.

மேற்கண்ட தகுதி உள்ளவர்கள் 2 பாஸ்போர்ட் புகைப்படம், கல்வித்தகுதி சான்று, ஆதார் அட்டை, இருப்பிடச்சான்று, விளையாட்டு, நான்கு சக்கர வாகன ஓட்டுனர் உரிமம், என்சிசி ஆகிய தங்களது தனித்திறமை சான்றிதழ்கள் ஆகியவற்றின் அசல் மற்றும் ஒரு சுய சான்றொப்பமிட்ட நகல்களுடன் வரும் 19ம் தேதி காலை 9 மணிக்கு திண்டுக்கல் சீலப்பாடி ஆயுதப் படை வளாக மைதானத்தில் நேரில் ஆஜராக வேண்டும்.

ஊர்க்காவல் படைவீரர்களாக தேர்வு செய்யப்படுபவர்களுக்கு போலீசார் மூலம் 45 நாட்கள் பயிற்சி அளிக்கப்படும்.

அதன்பிறகு பணிபுரிய அனுமதிக்கப்படுவார்கள். ஊர்க்காவல் படை வீரர்களுக்கு மாதத்திற்கு 5 நாட்கள் மட்டுமே பணி வழங்கப்படும். அவ்வாறு பணிபுரியும் ஊர்க்காவல் படையினருக்கு நாள் ஒன்றுக்கு மதிப்பூதியமாக ரூ.560 வழங்கப்படும். இத்தேர்வுக்கு முன்கூட்டியே விண்ணப்பிக்க தேவையில்லை என மாவட்ட எஸ்பி ரவளிபிரியா தெரிவித்துள்ளார்.

# எம்.பி.ஏ., - எம்.சி.ஏ., சேர்க்கை 18ம் தேதி துணை கவுன்சிலிங்

**கோவை, நவ. 13–**

எம்.பி.ஏ., – எம்.சி.ஏ., படிப்புகளுக்கான துணை கவுன்சிலிங், 18ம் தேதி நடக்க உள்ளது.

தமிழகத்திலுள்ள பல் கலை, இன்ஜி., கல்லூரிகள், கலை அறிவியல் கல்லூரிகள், மேலாண்மை கல்லூரிகளில், அரசு ஒதுக்கீட்டில் உள்ள எம்.பி.ஏ., – எம்.சி.ஏ., படிப்புகளுக்கான முதலாம் ஆண்டு மாணவர் சேர்க்கை, ஆன்லைன் கவுன்சிலிங் வாயிலாக நடந்தது.

வரும், 18ம் தேதி, கோவை அரசு தொழில்நுட்ப கல்லூரியில், எம்.பி.ஏ., – எம்.சி.ஏ., படிப்புகளுக்கு துணை கவுன்சிலிங் நடக்க உள்ளது. பொது கவுன்சிலிங் முடிவில் நிரப்பப்படாமல் உள்ள இடங்கள், இதில், நிரப்பப்பட உள்ளன.

பொது கவுன்சிலிங்கிற்கு விண்ணப்பித்து கலந்து கொள்ள இயலாதவர்கள், கவுன்சிலிங்கில், கல்லூரி ஒதுக்கீடு பெறாதவர்கள், 'டான்செட்–2020' தேர்வு எழுதி, இதுவரை கவுன்சிலிங்கிற்கு பதிவு செய்து விண்ணப்பிக்காதவர்கள், பதிவு செய்யாதவர்கள் என, அனைவரும் துணை கவுன்சிலிங்கில் பங்கேற்கலாம்.

இதற்காக அசல் சான்றிதழ்களுடன் விண்ணப்ப மற்றும் கவுன்சிலிங் கட்டணத்துடன், 18ம் தேதி காலை, 10.00 மணிக்கு முன், நேரிடையாக கவுன்சிலிங் மையமான கோவை ஜி.சி.டி., கல்லூரிக்கு சென்று பங்கேற்கலாம்.

இந்த துணை கவுன்சிலிங் தரவரிசை மற்றும் வகுப்பு வாரி இட ஒதுக்கீடு அடிப்படையில் நடத்தப்படும். மேலும் தகவல்களை www.gct.ac.in/www.tn-mbamca.com என்ற, இணையதளத்தின் வாயிலாக அறிந்துக் கொள்ளலாம்.

सी.एस.आई.आर – केंद्रीय विद्युतरसायन अनुसंधान संस्थान

**CSIR - CENTRAL ELECTROCHEMICAL RESEARCH INSTITUTE (CECRI),**

कारैकुड़ी / Karaikudi-630 003, TAMILNADU

# B.Tech (Chemical & Electrochemical Engineering)

[Approved By AICTE and Affiliated to Anna University, Chennai]

**ADMISSION NOTIFICATION TO FILL UP LAPSED SEAT UNDER TN GOVT. QUOTA 2020-21**

Candidates are invited for counseling on 24.11.2020 (Tuesday) **at 10.00 a.m.** to fill up the lapsed seats(12 seats: OC-2;BC-3;MBC-4;SC-2;SCA-1) under TN Government quota for admission to first year B.Tech (Chemical and Electrochemical Engineering) programme at CSIR-CECRI for the academic year 2020-21 based on TNEA-2020 Cut off mark / Rank.

**For Details : www.cecri.res.in**

## மருத்துவப் படிப்புகளுக்கான தகுதிச் சான்று

# இணையவழியில் பெற மருத்துவப் பல்கலை. நடவடிக்கை

**சென்னை, நவ. 12:** மருத்துவப் படிப்புகளில் சேருவதற்காக தகுதிச்சான்றினை இணையவழியில் விண்ணப்பித்து பெறும் நடைமுறையை தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் மருத்துவப் பல்கலைக்கழகம் நிகழாண்டு அறிமுகப்படுத்தியுள்ளது.

கரோனா பரவலைக் கருத்தில் கொண்டு மாணவர்களின் நலன் கருதி, இந்தப் புதிய முறையை செயல்படுத்தியிருப்பதாக மருத்துவப் பல்கலைக்கழக நிர்வாகிகள் தெரிவித்தனர். இதுவரை 9,500-க்கும் மேற்பட்டோருக்கு அவ்வாறு இணையவழித் தகுதிச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

பொதுவாக எம்பிபிஎஸ், பிடிஎஸ் படிப்புகளுக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள், தங்களது பள்ளிக் கல்வியை மாநில வழிப் பாடத்திட்டத்தின் கீழ் பயிலாத பட்சத்தில், அவர்கள் மருத்துவப் படிப்புகளில் சேர தகுதியானவர்களா என்பதை ஆய்வு செய்து சான்றிதழ் வழங்கப்படுவது வழக்கம். இதற்காக தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்துக்கு நேரில் சென்று, தங்களது ஆவணங்களைச் சமர்ப்பித்து தகுதிச்சான்றுக்கு மாணவர்கள் விண்ணப்பிப்பர்.

இந்நிலையில், நிகழாண்டு கரோனா நோய்த்தொற்று காரணமாக பல்வேறு கட்டுப்பாடுகளும், நோய்த் தடுப்பு விதிகளும் வகுக்கப்பட்டுள்ளன. இத்தகைய சூழலில், மாணவர்களின் நலன் கருதி இணையவழியே தகுதிச் சான்றிதழுக்கு விண்ணப்பிக்கும் நடைமுறையை மருத்துவப் பல்கலைக்கழகம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இதுகுறித்து பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் சுதா சேஷய்யன் கூறியதாவது:

நோய்த்தொற்று இன்னும் முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் வராத நிலையில், மருத்துவப் படிப்புகளுக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களை அங்குமிங்கும் அலைக்கழிப்பது சரியான நடவடிக்கையாக இருக்காது. அதுமட்டுமல்லாது, பெரும்பாலான மாணவர்கள் ஒரே நேரத்தில் தகுதிச் சான்றிதழுக்காக பல்கலைக்கழகத்துக்கு வரும் பட்சத்தில் தனிநபர் இடைவெளி கேள்விக்குறியாகிவிடும்.

இந்த விஷயங்களை எல்லாம் கருத்தில் கொண்டே இணையவழி தகுதிச் சான்றை முதல் முறையாக நடைமுறைப்படுத்தியுள்ளோம். இதனால், பல்கலைக்கழக அலுவலர்களுக்கு அதீத வேலைப் பளு ஏற்படும் என்றாலும், மாணவர்களின் நலனை மட்டுமே பிரதானமாகக் கொண்டு அதனை செயல்படுத்தியுள்ளோம்.

தகுதிச்சான்று கோரி, இதுவரை ஏறத்தாழ 10 ஆயிரம் விண்ணப்பங்கள் வந்துள்ளன. அவை அனைத்தும் உடனுக்குடன் ஆய்வு செய்யப்பட்டு, அடுத்த சில மணி நேரங்களில் மின்னஞ்சல் வழியாக சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு சான்றிதழ் அனுப்பப்பட்டு வருகிறது. அந்த வகையில் 9,500-க்கும் அதிகமானோருக்கு தகுதிச் சான்று வழங்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தின் பதிவாளர் டாக்டர் அஸ்வத் நாராயணன் மேற்பார்வையில், கல்வி அலுவலர் டாக்டர் சிவசங்கீதா மற்றும் அவரது குழுவினர் வார விடுமுறை, அரசு விடுமுறை கூட பாராமல் தொடர்ந்து அப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். மாணவர்களின் சூழல் கருதி பல்கலைக்கழகத்தில் உள்ள அனைத்து அலுவலர்களையும் தகுதிச் சான்று வழங்கும் பணிகளில் ஈடுபடுத்தியுள்ளோம் என்றார் அவர்.

இதனிடையே, மருத்துவப் படிப்புகளுக்கு விண்ணப்பித்த சில மாணவர்கள் இதுதொடர்பாக கூறியதாவது:

வழக்கமாக தகுதிச் சான்றுக்காக பல்கலைக்கழகத்துக்கு நேரில் சென்று வரிசையில் காத்திருந்து விண்ணப்பிக்க வேண்டும். ஒரு நாள் முழுவதும் இதற்காக செலவிட வேண்டியிருந்தது. தற்போது இணையவழியே விண்ணப்பிப்பது மிகவும் எளிதான நடைமுறையாக உள்ளது.

சொல்லப்போனால், எந்த நேரத்தில் வேண்டுமானாலும் விண்ணப்பிக்கக் கூடிய வசதியாக இது இருக்கிறது. அதுமட்டுமல்லாது, தகுதியான மாணவர்கள் அனைவருக்கும் அடுத்த சில மணி நேரங்களிலேயே சான்றிதழ் கிடைத்துவிடுகிறது.

இதனால், கரோனா காலத்தில் அச்சமின்றி மருத்துவ விண்ணப்பப் பதிவை மேற்கொள்கிறோம். இதேபோன்று மருத்துவக் கலந்தாய்வையும் இணையவழியே நடத்த வேண்டும் என்பதே எங்களது விருப்பம் என்று மாணவர்கள் தெரிவித்தனர்.